கீழ் (அரசு, தனியார், மற்றும் உள்ளாட்சி மன்ற நிருவாகங்களின் கீழ்) உள்ள பள்ளிகளுக்கு அப்பதவிகளைப் பகிர்ந்தளிக்கும் வேலையைத் தலைமைக் கல்வி அலுவலர்கள் செய்தனர். அவ்வாறு பகிர்ந்தளிக்கையில் அவர்கள் கருத்திற் கொண்டவை இரண்டு கோட்பாடுகளே. அவை (1) ஏற்கெனவே எப்பள்ளியிலாவது தொழில் பழகு ஆசிரியர் எவராவது இருப்பின் அவர்களுக்குப் பயன் அளிப்பதற்காகவென்று பதவிகள் ஒதுக்குதல்—மேலே விளக்கியவாறு : (2) அந்தந்த பள்ளிகளிலுள்ள ஆசிரிய மாணவர் விகிதப்படி எவற்றுக்குக் கூடுதல் ஆசிரியர் பதவிகள் மிகவும் தேவையோ அவற்றுக்குக் கூடுதல் பதவிகளை ஒதுக்குதல் ; ஆகிய இரண்டுமேயாகும். நிருவாகத்தை மனதிற் கொண்டு பதவிகளை ஒதுக்குதல் வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் செயல்படவில்லை. அவ்வாறு செயல்படுவது சரியுமாகாது. மேற்கண்ட கோட்பாடுகளின் அடிப்படையில் சில மாவட்டங்களில் தேவை காரணமாகத் தனியார் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட பதவிகள் உள்ளாட்சி மன்றப் பதவிகளுக்கு ஒதுக்கப்பட்ட பதவிகளை விடக் கூடுதலாக இருந்திருக்கலாம்.

எந்த ஊராட்சி ஒன்றியமாவது தனக்கு ஒதுக்கப்பட்ட பதவிகளுக்கு நியமனம் செய்து முடித்துவிட்டு அதற்குப் பிறகு இன்னும் கூடுதல் பதவிகள் (ஐந்து லட்சம் பேருக்கு வேலைத் திட்டத்தின் கீழ்) வேண்டும் என்று விரும்பினால் அந்தந்த மாவட்டத்திலுள்ள பள்ளிக் கல்வித்துறை அலுவலருக்கும், பள்ளிக் கல்வி இயக்குநருக்கும் தெரிவிக்கலாம். அவ்வாறு விரும்பும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரிய மாணவர் விகிதம் இடம் தருமேயானால், அந்தந்த மாவட்டத்தில் பிற நிருவாகங்களிலாவது, அல்லது வேறு மாவட்டங்களிலாவது மேற்படி திட்டப் பதவிகள் மிஞ்சுமாயின் அவ்வாறு மிஞ்சும் பதவிகளைத் தர, பள்ளிக் கல்வித் துறை முயலும்.

(2) அரை மில்லியன் திட்டத்தில் சுமார் 200 பி.டி. ஆசிரியர்களை நியமிக்காதது குறித்து.

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன் :

" அரை மில்லியன் திட்டத்தில், 1,200 பி.டி. ஆசிரியர்களை நியமித்துக் கொள்வதில், அரசினர் " பி " பிரிவு பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும், இடைநிலைத் தரத்தில் பணிபுரியும் பி.டி. ஆசிரியர்களுக்கு, முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருந்தும், அந்த பி.டி. ஆசிரியர்களை (சுமார் 200 பேர் கொண்டோரை) இது வரையில் ஈர்த்துக் கொள்ளாதது குறித்து."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே ஐந்து லட்சம் பேருக்கு வேலை என்ற புதிய திட்டத்தின் கீழ் 10,200 ஆசிரியர் பதவிகளில் 1,200 பதவி பி.டி. ஆசிரியர்கள் பதவி ஆகும் பல்வேறு வகை நிர்வாகங்களில் செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிகளில் பணி செய்வோரில் பி.டி. தேர்ச்சி பெற்றவர்கள் இருந்தால் அவர்களுக்கு இந்த நியமனங்களில் முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று அரசு ஆணை யிட்டுள்ளது. ஆயினும், இதில் ஒரு நடைமுறை சிக்கல் எழுந்துள்ளது. அந்தந்தப் பள்ளியில் எந்தப் பாடத்தைப் போதிக்க ஆசிரியர் தேவைப் படுகிறதோ, அந்தப் பாடத்தில் பி.டி. பட்டம் பெற்று இருந்தால்தான், அவர்களை நியமிக்க வழி ஏற்படும். இப்பொழுது நியமிக்கத் தேவைப்படும் ஆசிரியர்கள் பெரும்பாலும் அறிவியல், கணிதம் ஆகிய துறைகளில்தான். செகண்டரி கிரேடு ஆசிரியர்களில் பி.டி. தேர்ச்சி பெற்றவர்கள், பெரும் பாலும் வரலாறு, புவியியல் போன்ற பாடங்களில் கற்பிக்கவே தகுதி யுடையவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே, பி.டி. ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது, எந்தப் பாடத்திற்கு ஆசிரியர் தேவைப்படு கிறதோ, அந்தப் பாடத்தில் பி.டி. தேர்ச்சி பெற்றுள்ள செகண்டரி கிரேடு ஆசிரியருக்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று நிலைமை தெளிவாக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில்தான் நியமனங்கள் செய்யப்படுகின்றன. இதற்கிணங்க, கூடியவரை, ஏற்கெனவே பணியாற் றும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களில் பி.டி. தேர்ச்சி பெற்றவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(3) கல்வித் துறையின் 27—7—1973-ம் நாளிட்ட 1324-ம் எண்ணுள்ள அரசு ஆணையைச் செயல்படுத்தியதன் விளைவாக சில ஊராட்சி ஒன்றியங் களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்து.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். "கல்வித் துறையின் 27-7-1973-ஆம் நாளிட்ட 1324ஆம் எண்ணுள்ள அரசு ஆணையைத் திருத்த வேண்டும் என்றும், அதனால் அதனைச் செயல்படுத்த வேண்டாமென்றும், தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், அந்த ஆணையைச் செயல் படுத்தியதன் விளைவாக கொறடாச்சேரி, தலைஞாயிறு, முத்துப் பேட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக் கேற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்து."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1970ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ஆம் தேதிக்கு முன்னால், இடை நிலை ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதம் ஒன்றாகவே இருந்தது. ஆகையினால் சில இடைநிலை ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாகப் பணி புரிய விரும்பவில்லை. ஆத லால், இடைநிலை ஆசிரியர்களின் பணிமூப்புக்குத் தக்கவாறு தலைமை ஆசிரியர்கள் நியமனம் செய்யவேண்டிய தேவையில்லாமல் இருந்தது.